வரையிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கின்ற காரணத்தினால் உள்ளாட்சித் துறைத் தேர்தல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திரு மீ. வின்சென்ட் : தலைவர் அவர்களே, நிதிநிலை முழு அளவில் இருக்கிற காரணத்தினாலே, 30–6–81க்கு பிறகாவது நாகர்கோவில் நகராட்சியை மாநகராட்சியாக ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அது பரிசீலிக்கப்படும்.

திரு. கு. ப. பழனியப்பன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கிளாரிபிகேஷன் எல்லாம் கிடையாது.

கன்னியாகுமரி நகரியம

குறுகியகால வினா எண். 2— திரு. சு. முத்துகிருஷ்ணன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி நகரியத்தை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) இதனால் வருமானம் எவ்வளவு அதிகரிக்கும் ?

(இ) கன்னியாகுமரியில் சோடியம் விளக்குகள் பொருத்தி அழகுபடுத்த வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ), (ஆ) மற்றும் (இ) : இதுபற்றிய செயற்குறிப்புகள் ஏதும் அரசிடம் இப்போது இல்லை. அப்படி நகராட்சியாக மாற்ற வேண்டுமானாலும் அதை 30–6–81க்குப் பின்தான் பரிசீலிக்க முடியும்.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, கன்னியாகுமரி நகரியத்தை நகராட்சியாக மாற்றுவது குறித்து 30–6–81க்கு பின்னர்தான் பரிசீலிக்க முடியும் என்று சொன்னார்கள். கன்னியாகுமரி இந்தியாவிலேயே ஒரு முக்கியமான சுற்றுலாப் பிரதேசம். கூடுதலான வருமானத்தை ஈட்டுகின்ற இடம். ஆகவே, அரசு அதில் தனிக்கவனம் செலுத்தி, கன்னியாகுமரி நகரியத்தை இந்த ஆண்டிலேயே நகராட்சியாக உயர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

அது மட்டுமல்ல, என்னுடைய மூலக்கேள்வியிலேயே கன்னியாகுமரியில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தி அழகுபடுத்த வழிவகை செய்யப்படுமா என்று கேட்டு இருந்தேன். அதற்கு

அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கவில்லை. சென்னையில் சோடியம் ஆவி விளக்குகள் அமைத்து இருப்பதுபோல், நிதிச் செலவைப் பாராமல், கன்னியாகுமரி முக்கிய சுற்றுலா இடமாக இருப்பதால், அங்கே சோடியம் விளக்குகளைப் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதற்கு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தற்போது நகரியமாக இருந்து வருகிறது. நகரியத்தை நகராட்சியாக மாற்றவேண்டுமானால் சில நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளின் அடிப்படையில்தான் நகரியத்தை நகராட்சியாக மாற்றுவது, அல்லது நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவது, என்பது தற்போது செய்யப்பட்டு வருகிறது. கன்னியகுமரியைப் பொருத்தவரையில் இப்போது இருக்கின்ற ஜனத்தொகை கணக்கு 11,124 பேர் என்பதாகும். இந்தக் கணக்கு 1971ன் படி இருக்கிறது. இந்த 10 ஆண்டு காலத்தில் ஜனத்தொகை அதிகரித்து இருக்கக்கூடும். ஆகவே, அந்த மக்கள் தொகை கணக்குகள் எடுத்து முடிக்கப்பட்டவுடன், இதைப் பற்றிய யோசனையை 30-6-81க்குப் பின்னால் பரிசிலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்துவது என்பது அந்த நகரியத்தின் நிதி நிலைமையைப் பொருத்து இருக்கிறது. நிதி வசதி இருந்தால் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்துவதற்கான வசதிகளை இந்த அரசு செய்யும்.

திரு. கோவைத்தம்பி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரிக்கும் சென்னைக்கும் சோடியம் விளக்குகள் பொருத்தப்படவேண்டும் என்கிற நிலை இருக்கிறபோது, இந்த மாமன்றத்தின் உள்ளேயும் சோடியம் விளக்குகள் பொருத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இந்த அவை மிக அழகான ஒளியோடு தற்போது மின்னிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, இங்கே சோடியம் ஆவி விளக்குகள் தேவையில்லை.

திரு. சு. முத்துகிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற போது, நகரியத்தின் வருமானத்தில் இருந்து சோடியம் விளக்குகள் போடலாம் என்று சொன்னார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்து வரையில், அது மிகவும் முக்கியமான சுற்றுலா பகுதி. சென்னையில் நாம் அந்த விளக்குகளைப் போட்டிருக்கிற போது, அதே போல் கன்னியாகுமரியிலும் அரசு தனிக்கவனம்செலுத்தி, அந்தசோடியம் ஆவி விளக்குகளைப் பொருத்தி அந்த நகரியத்தை அழகு படுத்த முன் வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1981 சனவரி 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே பதில் சொல்லிவிட்டார். நிதி வசதி இருந்தால் சோடியம் ஆவி விளக்குகள் மட்டுமல்ல, எந்த விளக்கு வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2 தகவல் கோரல்,

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் பிரச்சினை.... (குறுக்கீடு) இன்றைக்கு மூன்று அவை உரிமை மீறல் பிரச்சனைகள் எடுத்துக்கொள்ளப் பெற்று இருக்கின்றன. அதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்று சொல்ல முடியாது. எல்லா பிரச்னைகளும் முக்கியம் தான். ஒவ்வொரு பிரச்னையாகத் தான் எடுத்துக்கொள்ள முடியும்.

திரு. சோ. அழகர்சாமி: மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டு, அதற்குப் பதில் கொடுத்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொண்டதால், நாமும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அல்ல. இந்த அவையின் அலுவல் ஆய்வுக்குழு எடுக்கிற முடிவின் அடிப்படையில், நம்முடைய நிகழ்ச்சிகள் அமைகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, இந்தச் சபையில் ஒத்திவைப்புத் தீர்மானம் அண்ணாமலை பல்கலைக் கழகம் பற்றி கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்ள வில்லை. ஆனால் மேல்சபையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இந்தச் சபை முக்கியம் இல்லையா? இந்த அவைக்கு அதை விவாதிக்க, தெரிந்துகொள்ள 'ரைட்' இல்லையா? (குறுக்கீடுகள்) இந்த அவையிலும் எடுத்துக் கொள்ள வழிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எல்லோரும் அவரவர் இருக்கையில் அமருங்கள். நான் எல்லோருக்கும் வழிவிடலாம் என்றுதான் நினைக்கிறேன்; முடியவில்லை. இங்கே ஆளுநர் உரையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS